தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

# தஞ்சாவூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(23.09.2023 முதல் 27.09.2023)

அறிக்கைஎண்: 76/2023 தேதி : 22.09.2023

## தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34 - 36 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (23.09.2023 முதல் 27.09.2023).

| கடந்தவாரவானிலை (18.09.2023 முதல் 21.09.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (23.09.2023 முதல் 27.09.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 18/09 | நாள்-2 19/09 | நாள்-3 20/09 | நாள்-4 21/09 | தேதி | நாள்-1 23/09 | நாள்-2 24/09 | நாள்-3 25/09 | நாள்-4 26/09 | நாள்-5 27/09 |
| 10.1 | 8.9 | 8.9 | 0.0 | மழை (மி.மீ.) | 3 | 3 | 4 | 6 | 7 |
| 34 | 34 | 35 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 35 | 35 | 34 |
| 26 | 26 | 26 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 26 | 26 | 25 | 25 |
| 6 | 6 | 5 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 6 | 7 | 8 |
| 80-68 | 78-64 | 80-63 | 73-63 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-60 | 80-50 | 80-50 | 80-50 | 80-60 |
| 4 | 4 | 4 | 6 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 18 | 10 | 12 | 14 | 12 |
| மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தெற்கு | தென் தென் மேற்கு |

## தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 23.09.2023 முதல் 27.09.2023 ஆகிய தினங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 – 36 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 - 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 - 18 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| நெல் | நாற்றாங்கால் | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி தாளடி நாற்றாங்கால் தயார் செய்யவும். |
| | | விதைத்த நாற்றாங்காலில் விதைகள் மழை நீரினால் சிதறுவதை தடுக்க, வைக்கோலை நாற்றாங்காலில் பரப்பிவிடவும் |
| நெல் | நடவு வயல் | மழைகாலம் நூற்புழு தாக்குதலுக்கு உகந்தது என்பதால், தாளடி நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம். |
| பருத்தி | அறுவடை | மழையினால் முதிர்ந்த பருத்திக்கு ஏற்ப்படும் சேதத்தை தவிர்க்க மழைக்கு முன்னதாக முதிர்ந்த பருத்திகளை அறுவடை செய்து மழை நீர் படாமல் பாதுகாக்கவும். |
| வாழை | | உகந்த வானிலையை கருத்தில் கொண்டு வாழைக்கு பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இடவும். |
| கால்நடைகள் | மாடு | மழைக்காலமாக இருக்கும் காரணத்தினால் நீரில் நனைந்த அல்லது மூழ்கிய தானியங்களை/ புண்ணாக்கை கால்நடைகளுக்கு தருவதை தவிர்க்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

விதைத்த நாற்றாங்காலில் விதைகள் மழை நீரினால் சிதறுவதை தடுக்க, வைக்கோலை நாற்றாங்காலில் பரப்பிவிடவும்

**இயக்குநர்**